கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் தமிழ்நாட்டில் 8 கொலைகள் நடந்துள்ளது!

# தமிழ்நாட்டில் காவல்துறை செயல்படுகிறதா? இல்லை முதல்வரைப் போல் ஓய்வில்தான் இருக்கிறதா?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!

சென்னை, செப்.20-

கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் தமிழ்நாட்டில் 8 கொலைகள் நடந்துள்ளதாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் செயலிழந்துபோயுள்ளது என்பதற்கு இந்தக் கொலைகள்தான் சாட்சி.



ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டில் கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. தமிழ்நாட்டின் Growth Rate-ஐ உயர்த்துவார்கள் என நம்பி வாக்களித்த மக்களுக்கு, தினமும் Crime Rate-ஐ உயர்த்தி தண்டனை கொடுத்துக் கொண்டிருக்கிறது த.வெ.க. அரசு.

தமிழ்நாட்டில் மக்களின் பாதுகாப்பு அன்றாடம் கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கும்போது, என்ன செய்து கொண்டிருக்கிறது தமிழ்நாடு அரசு? தமிழ்நாட்டில் காவல் துறை செயல்படுகிறதா? இல்லை அதுவும் முதலமைச்சரைப் போல் ஓய்வில்தான் இருக்கிறதா?

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்துள்ளார்.

4,5,6,9 மண்டலத்திற்குட்பட்ட

# மாவட்ட, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிக்கை!

சென்னை, செப்.20-

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களுடன் கழக இளைஞர் அணி செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ். சுகன்யா அவர்களை ஆதரித்து கழக இளைஞர் அணி சார்பில் தேர்தல் பணியாற்றிட மண்டலம் 4,5,6,9 க்குட்பட்ட மாவட்ட, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (20.09.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில் தாராபுரம் நகர கழக அலுவலகத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு. பெ.சாமிநாதன் தலைமையில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர்



இல.பத்மநாபன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள் இன்பாரகு, சீனிவாசன் எம் எல் ஏ, ஆனந்தகுமார், திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் மு.ஜெயக்குமார் எம்.எல்.ஏ., திருப்பூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் யுவராஜ் மற்றும் துணை அமைப்பாளர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் 4,5,6,9 மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறேன் .

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி இளைஞரணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில் வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகையை திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு ஒன்றியம் கர்லம்பாக்கம் பகுதியை சார்ந்த ஏழுமலைக்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண், முன்னிலையில் ரூ.25 ஆயிரம் மதிப்பிலான மருத்துவ உதவித் தொகைக்கான காசோலை வழங்கினர் உடன் ஒன்றிய கழகச் செயலாளர் பி.டி.சந்திரன், நிர்வாகிகள் முரளி சேனா, எஸ்.சின்னா, மணி உள்பட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.





